## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 66/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | தமிழ்செல்வன் | நாள் | 29.11.2022 |
| தகப்பனார் பெயர் | வரதராஜன் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

23) தாவா சொத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள என் தந்தையின் உடலை மீண்டும் பொது இடுகாட்டில் தான் அடக்கம் செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. (மேற்படி வினா வாதி தரப்பில் இவ்வழக்கின் கருப்பொருளுக்கு தொடர்பற்றது என ஆட்சேபிக்கப்பட்டு வாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு பதிவு செய்யப்படுகிறது).

24) இன்று வரை தாவா சொத்தில் சட்டபுறம்பான செயலை செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. இத்தாவா சொத்து தொடர்பாக அ.வ.எண்.9/2013 என்ற பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி அ.வ.எண்.9/2013 என்ற வழக்கில் என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் மேற்படி வழக்கில் என் தந்தைக்கும், மேற்படி வழக்கின் வாதிகளுக்கும் அவர்களுடைய பெற்றோர்கள் மற்றும் சகோரர்களுக்கு இடையேயான உறவுமுறையை ஒத்துக்கொண்டுள்ளார் என்றால், சரிதான்.

25) இவ்வழக்கில் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள ச.எண்கள் 362/2 மற்றும் 362/3 ஆகும். மேற்படி ச.எண்கள் 362/2 மற்றும் 362/3 ஆகியவையும் 1ம் பிரதிவாதி மாரியம்மாள் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.9/2013 என்ற வழக்கில் இதர சொத்துக்களுடன் சேர்த்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

26) வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரத்தில், மாரிமுத்து கவுண்டரின் பெண் வாரிசான மாரியம்மாளின் கையெழுத்து இல்லாததால் மேற்படி பாகபிரிவினை பத்திரமும், அதன் அடிப்படையில் தாவா சொத்தை என் தந்தை கிரயம் பெற்ற வா.சா.ஆ.2 கிரய பத்திரமும் செல்லாது என்றால், சரியல்ல. மேற்படி பாகபிரிவினை பத்திரம் 1964ம் வருடத்தில்

ஏற்படுத்தப்பட்டது. அந்த சமயத்தில் மாரியம்மாள் பிறக்காததால் அதில் அவரது கையெழுத்து இல்லை.

27) மேற்படி வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்ட தேதியில், 1ம் பிரதிவாதி பிறக்கவில்லை என நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

28) என் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தில் ஏதேனும் வீடும், கட்டிடமும், மாட்டு கொட்டகையும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். தாவா சொத்தின் சொத்து விவரத்தில் எவ்வித வீடும் குறிப்பிடப்படாத நிலையில், எங்கள் தரப்பில் வா.சா.ஆ.4 வீட்டு வரி ரசீதும், வா.சா.ஆ.5 மின் கட்டண ரசீதும் தாவாவிற்கு தொடர்பற்றது என்றால், சரியல்ல.

29) வா.சா.ஆ.1 பாகபிரிவினை பத்திரம் செல்லாத நிலையிலும், அதன் அடிப்படையாக கொண்டு வாங்கிய வா.சா.ஆ.2 கிரய பத்திரம் செல்லாது என்ற நிலையிலும், மேற்படி கிரய பத்திரத்தின் அடிப்படையில் பெறப்பட்ட என் பெயரிலும், என் தந்தை பெயரிலும் உள்ள பட்டாக்கள் வா.சா.ஆ.8, வா.சா.ஆ.9 ஆகியவை செல்லாது என்றால், சரியல்ல.

30) சர்வே எண்.362/2ல் உள்ள அய்யனார் கோவில் 1ம் பிரதிவாதிக்கும், அவரது பங்காளிகளுக்கும் உரிமை உள்ளது என்ற நிலையில், மேற்படி அய்யனார் கோவிலை என் சொத்து விவரத்தில் காண்பிக்காததால், வழக்குரையில் உள்ள என் சொத்து விவரமே தவறானது என்றால், சரியல்ல.

31) 1ம் பிரதிவாதிக்கும் அவரது பங்காளிகளுக்கும் சொந்தமான அய்யனார் கோவிலையும் சேர்த்து நான் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோருவது செல்லாது என்றால், சரியல்ல.

32) நாங்கள் 1ம் பிரதிவாதிக்கு கூட்டு பங்குரிமையுடைய சொத்தை தவறாக கிரயம் பெற்று அதில், அவரது மற்ற பங்காளிகளுக்கும் அய்யனார் கோவிலில் உரிமை

பாத்தியம் உள்ள நிலையில் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருப்பதற்கு எவ்வித முறையான ஆவணங்களையும் தாக்கல் செய்யாத நிலையில், நான் தாக்கல் செய்துள்ள சொத்து வரி மற்றும் மின் இணைப்பு கட்டணங்கள் தாவா சொத்திற்கு தொடர்பற்றது என்ற நிலையில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்ய அருகதையுடையது என்று சொன்னால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.